**Revised**

செய்தி வெளியீடு எண்:669 நாள்:31.08.2021

## செய்தி வெளியீடு

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் டோக்கியோ பாராலிம்பிக்சில் பதக்கம் வென்றவர்களைப் பாராட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி

டோக்கியோ பாராலிம்பிக்சில் இந்தியா தொடர் வெற்றிகளைக் குவித்துவருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்து இரண்டாவது முறையாக உயரம் தாண்டுதலில் பாராலிம்பிக்சில் பதக்கம் வென்றுள்ள நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த நட்சத்திர வீரர் திரு. மாரியப்பன் தங்கவேலு, உயரம் தாண்டுதல் மற்றும் துப்பாக்கிச் சுடுதலில் வெண்கலம் வென்றுள்ள திரு. சரத்குமார் மற்றும் திரு. சிங்ராஜ் அதானா ஆகிய மூவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராலிம்பிக்சில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள திரு. மாரியப்பன் தங்கவேலு அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

Happy to see Team India continue its winning streak at Tokyo 2020 Paralympics. Congratulations to our Tamil Nadu star Thiru Mariyappan Thangavelu who won his 2nd consecutive Paralympics medal in High Jump, Thiru Sharad Kumar, and Thiru Singhraj Adhana for their Bronze in High Jump & Shooting respectively.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9